# விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1)** இந்தியாவின் முதல் மின் சக்தியை பயன்படுத்தி ஓடும் ட்வின் எஞ்சின் இயந்திர சேவை எங்கே தொடங்கப்பட்டது?

**A]** வாரணாசி

**B]** தில்லி

**C]** ராஞ்சி

**D]** சிம்லா

- ✓ பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் கடந்த பிப்ரவரி மாதம் **19**ஆம் தேதி இந்தியாவின் முதல் மின் சக்தியை பயன்படுத்தி ஓடும் ட்வின் எஞ்சின் இயந்திர சேவை வாரணாசியில் உள்ள **DLW** ல் தொடங்கப்பட்டது. இது பத்தாயிரம் குதிரைத்திறன் கொண்ட கொண்டதாகும். இந்தத் திட்டமானது மேக் இன் இந்தியா திட்டத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டதாகும்.
- ✓ இந்த **DLW** நிறுவனமானது இரண்டு **WDG3A** டீசல் என்ஜினை பத்தாயிரம் குதிரைத்திறன் கொண்ட எலக்ட்ரிக் **WAGC3** ஆக மாற்றியது.
- ✓ இந்த எஞ்சின் பசுமை இல்ல வாயுக்களை குறைவாக வெளியிடுவதுடன் இந்திய ரயில்வேக்கு ஏற்ற எஞ்சினாகவும் கருதப்படுகிறது.
- ✓ இந்த சாதனையை நிகழ்த்த **Research design and standards organisation, chittaranjan locomotive works and Bharat heavy electronics limited** சேர்ந்த பொறியாளர்கள் உதவினர்.
- ✓ ரயில்வே நிர்வாகிகளை பொறுத்தவரை இது ஒரு சாதனை மட்டுமல்லாமல் குறைந்த செலவில் உருவாக்கப்பட்டதாகும். ஒரு இன்ஜினை பழுதுபார்க்க ஆகும் செலவை விட **50** சதவீத செலவை இந்த எஞ்சினை உருவாக்க தேவைப்படுகிறது. மேலும் இது சுற்றுச் சூழலுக்கு எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாது அதே சமயம் ஒரு சராசரி ரயிலின் வேகத்தை விட கூடுதல் வேகம் உடையது.

**2)** கீழ்க்காணும் எவை இந்திய அரசாங்கத்தின் அவசரகால உதவி அமைப்பு மையத்தால் உருவாக்கப்பட்ட பான் - இந்தியா இலவச அவசர கால அழைப்பு எண் ஆகும்?

**A]** 114

**B]** 112



winmeen.com

C] 113

D] 116

- ✓ இந்திய அரசாங்கத்தால் அவசரகால இலவச அழைப்பு எண் 112 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே எண்ணில் இருந்து காவல், தீயணைப்பு துறை, மருத்துவத்துறை மற்றும் பெண்கள் பாதுகாப்பு போன்ற அனைத்து துறைகளுக்கும் ஒரே எண்ணாக 112 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ 10 முதல் 12 நிமிடங்கள் நிமிடங்களுக்குள் இந்த அழைப்பின் மூலம உதவியை பெற இயலும். அடுத்த 6 லிருந்து 8 மாதங்களுக்குள் இந்த காத்திருப்பு நேரத்தை 8 நிமிடங்கள் ஆக குறைக்கப்படும் என அறிவித்துள்ளனர்.
- ✓ இந்த சேவையானது இந்தியாவில் உள்ள 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசம்,உத்தரகாண்ட், பஞ்சாப், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா பிரதேசம், தெலங்கானா, குஜராத், புதுச்சேரி, லட்சத்தீவு, அந்தமான் ,தாதர் நாகர் ஹவெளி, டயு டாமன், ஜம்மு காஷ்மீர் ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ மேலும் **investigation tracking system for sexual offences** மற்றும் **safe city implementation monitoring portal** போன்றவற்றையும் இந்திய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

**3) இந்தியாவின் முதல் மாவட்ட குளிர்ச்சி அமைப்பு (district cooling system) கீழ்காணும் எந்த நகரத்தில் அமைய உள்ளது?**

A] ஹைதராபாத்

B] பெங்களூரு

C] அமராவதி

D] சென்னை

- ✓ ஆந்திரப் பிரதேச அரசாங்கம் யுஏஇ (UAE) நாட்டைச் சார்ந்த நேஷனல் சென்ட்ரல் கூலிங் கம்பெனி (Tabreeds) என்ற நிறுவனத்திடம் முப்பது ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன் மூலம் அமராவதியை சேர்ந்த கிரீன்ஃபீல்ட் நகரத்திற்கு மாவட்ட மைய குளிர்ச்சி அமைப்பினை உருவாக்கவிருக்கிறது.

- ✓ இந்த ஒப்பந்தத்தின்படி **20,000** டன் குளிர்ச்சி திறனை அமராவதி கிரீன்ஃபீல்ட் நகரத்தில் நிறுவ உள்ளது. இந்த சேவை **2021**ன் தொடக்கத்தில் தொடங்கப்பட உள்ளது. ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தின் தலைநகரான அமராவதியில் வேலைவாய்ப்பு, அனைவருக்கும் வீடு அத்துடன் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஆந்திர அரசாங்கத்தின் ஒரு தொலைநோக்குப் பார்வையாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.பிற குளிர்ச்சி அமைப்புகளுடன் ஒப்பிடும்போது மாவட்ட மைய குளிர்ச்சி அமைப்பானது **50%** சக்தியை மட்டுமே பயன்படுத்தும்.மேலும் குறைந்த **CO2**யை வெளியேற்றும்.
- ✓ மேலும் இந்த முறையில் காற்றின் தரம் கூடுவதோடு மட்டுமல்லாமல் குறைந்த ஒலியையும் வெளியிடும். **UAE** நாட்டைச் சேர்ந்த **Tabreeds** நிறுவனத்தின் முதல் வளைகுடா அற்ற நாடுகளில் செயல்படுத்தப்படும் திட்டமாகும்

**4) 2019 ஆம் ஆண்டிற்கான மார்ட்டின் என்னல்ஸ் மனித உரிமைகள் பரிசை வென்றவர் யார்?**

**A]** ஹசன் சலேஹ்

**B]** அப்துல் அசிஸ் முகமது

**C]** பொஹ்ரோஸ் பூச்சானி

**D]** மிரல் அல் தஹாவி

- ✓ சூடான் நாட்டைச் சேர்ந்த அகதியான அப்துல் அசிஸ் முகமது என்பவருக்கு **2019** ஆம் ஆண்டிற்கான மனித உரிமைகள் பரிசு வழங்கப்பட்டது.
- ✓ ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் மனிதத்தன்மையற்ற அகதிகள் கொள்கைகளை வெளி உலகிற்கு கொண்டு வந்ததால் இவருக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டது.
- ✓ மேற்கத்திய ஜனநாயகத்தின் மனிதத் தன்மையற்ற அகதிகள் கொள்கைகளை எதிர்த்ததால் முதல்முறையாக ஒரு தனி மனிதருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ✓ இவர் ஆஸ்திரேலியாவின் பாப்பா நியூ கினியாவில் உள்ள மனுஸ் தீவில் **5** ஆண்டுகளாக சிறை பிடிக்கப்பட்டு இருந்தார். **2013**ஆம் ஆண்டு இவரது படகு ஆஸ்திரேலிய எல்லைக்குள் நுழைந்ததே இதற்கு காரணம். சுவிஸ் விசா வழங்கப்பட்டதற்கு பிறகு முகமத் அவர்களை இந்த தீவில் இருந்து விடுவிக்க ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டது.

✓ அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இங்கிலாந்தை சேர்ந்த மனித உரிமைகள் ஆர்வலர் மார்டின் என்னல்ஸ் அவர்களின் நினைவாக இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

**5) simplicity and wisdom** என்ற நூலின் ஆசிரியர் யார்?

**A]** ஜீத் தயில்

**B]** அகமதும் மௌரத்

**C]** தினேஷ் சஹாரா

**D]** ரவிசுப்பிரமணியன்

✓ **simplicity and wisdom** என்ற புத்தகத்தை புகழ் பெற்ற தொழில் அதிபரும் கொடையாளருமான தினேஷ் சகாரா அவர்கள் இயற்றினார். இது மேற்கு வங்காள ஆளுநர் கேசரிநாத் திரிபாதி அவர்களால் **2019** கும்பமேளாவில் பரமார்த்த ஆசிரமத்தில் வெளியிடப்பட்டது.

✓ இந்தப் புத்தகம் வேதாந்த சுவாமி பிரஹ்ஹானந்தர் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது. துறவற ஞானத்தையும் ஆனந்தமான வாழ்க்கைகுறிய வழியைக் காட்டவும் இந்தப் புத்தகம் எழுதப்பெற்றது.

**6)** புகழ் பெற்ற விளையாட்டு உடைகள்/ உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனமான **PUMA** வின் விளம்பர தூதுவராக நியமிக்கப்பட்டவர் யார்?

**A]** ஸ்வப்னா பர்மன்

**B]** நிர்மலா ஷிரன்

**C]** டூட்டி சந்த்

**D]** மேரி கோம்

✓ ஆறுமுறை உலகப் பெண்கள் குத்துச்சண்டை சாம்பியன் வீராங்கனை மேரி கோம் அவர்கள் **PUMA** விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடைகள் நிறுவனத்தின் விளம்பர தூதுவராக இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

✓ இவர் பூமா இந்தியா பெண்கள் பயிற்சி பிரிவில் இந்தியாவிற்கான விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

7) இந்தியாவை தலைமையிடமாகக் கொண்ட எந்த **NGO** நிறுவனத்திற்கு **2019** ஆம் ஆண்டுக்கான லாரிஸ் நல்ல விளையாட்டுக்கான விருது **(Lauris sport for good awarD]** வழங்கப்பட்டது?

A] Faith

B] Ekjut

C] யுவா

D] அமர் ஜோதி

✓ ஜார்க்கண்டில் உள்ள பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடும் யுவா **NGO** நிறுவனத்திற்கு **2019** ஆம் ஆண்டுக்கான லாரிஸ் நல்ல விளையாட்டுக்கான விருது மோனாக்கோவில் வழங்கப்பட்டது.

✓ **2009** ஆம் ஆண்டில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள கிராமப்புறத்தில் **Franz Gastler** மற்றும் **Rose Thomson Gastler** என்ற அமெரிக்கர்களால் தொடங்கப்பட்டது இந்த நிறுவனம்.

✓ பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள், குழந்தை திருமணம் அதிகம் பரவி உள்ள இடங்களில் வாழும் பெண்கள் போன்றோர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இந்த நிறுவனம் கால்பந்து விளையாட்டை கையில் எடுத்துள்ளது. இதுவரையிலும் **450** பெண்களின் வாழ்வு இந்த நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பெண்களில் (அமெச்சூர்) புதிதாக உருவாகும் வீராங்கனைகளாகவும் மற்றும் சிலர் பயிற்சியாளராகவும் மாறி உள்ளனர்.

✓ இந்த விருது மூன்றாவது முறையாக இந்தியாவிற்கு வழங்கப்படுகிறது. முதல் முறையாக **2004**ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் இடையேயான கிரிக்கெட் போட்டியில் இரு நாடுகளுக்கும் இடையே பதட்டம் நிலவியதால் இரு கிரிக்கெட் அணிகளும் தங்களது வெற்றியை சமமாக பங்கு போட்டுக் கொண்டது.

✓ இந்திய நாட்டில் உள்ள பின்தங்கிய குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்தியதால் மேஜிக் பஸ் என்ற நிறுவனம் இந்த விருதை இரண்டாவது முறையாக பெற்றது குறிப்பிடத்தக்கது.

8) அகஸ்தியர் கூட சிகரம் **[Agasthyarkoodam peak]** கீழ்க்கண்ட எந்த மாநிலத்தில் உள்ளது?

A] ஒடிஸா

B] கேரளா

C] கர்நாடகா

D] ஆந்திர பிரதேசம்

- ✓ திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பாதுகாப்புத்துறையின் செய்தியாளரான கே தன்யா சனல் என்ற பெண்மணி **1868** மீட்டர் உயரமுள்ள அகஸ்தியர் கூடம் என்ற சிகரத்தில் முதல் பெண்மணியாக ஏறி சாதனை படைத்துள்ளார். உயர் நீதிமன்றம் பெண்கள் அகஸ்தியர் கூட மலை ஏறுவதற்கான தடையை நீக்கியதன் விளைவால் இவர் இந்த சிகரத்தை தொட்டு உள்ளார்.
- ✓ அகஸ்தியர் கூடம் அகஸ்திய மலை உயிர்க்கோள பாதுகாப்பின் ஒரு பகுதியாகும். இது தமிழ்நாடு மற்றும் கேரளா எல்லைப் பகுதியில் உள்ளது.
- ✓ அந்தப் பகுதியைச் சேர்ந்த கனி மலைவாழ் மக்கள் பெண்கள் இந்த மலையை ஏறுவதை எதிர்த்து குரல் கொடுத்தனர். அவர்களின் நம்பிக்கைப்படி இந்த சிகரத்தில் அகஸ்திய முனிவர் வசிப்பதாக கூறுகின்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட கனி மலைவாழ் மக்கள் ஒன்றிணைந்து தங்களது பாரம்பரிய பாடலை கூட்டாகப் பாடி அவர்களின் எதிர்ப்பை பதிவிட்டனர்.

**9)** சமீபத்தில் செய்திகளில் காணப்படும் 'சிவப்பு பவள குக்ரி' **[Red Coral Kukri]** ஊர்வன வகையில் எந்த பிரிவை சாரும்**?**

**A]** ஆமை

**B]** பாம்பு

**C]** பல்லி

**D]** முதலை

- ✓ அரியவகை இந்திய பாம்பான சிவப்பு பவள குக்ரியானது துத்வா புலிகள் சரணாலயத்தில் **82** ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக காணப்படுகிறது.
- ✓ இந்த ஊர்வன வகை முதல் முறையாக **1936** ஆம் ஆண்டு துத்வா பகுதியில் கண்டறியப்பட்டது. கெர்ரீ பகுதியில் கண்டெடுக்கப்பட்டதால் இதன் உயிரியல் பெயர் "**Oligodon Kheriensis**" என்றானது.
- ✓ அறிவியலாளர்களின் கூற்றுப்படி இந்த பாம்பு வகையானது **114** சென்டிமீட்டர் நீளமும் இரவில் விழிப்புடன் விஷமற்ற தன்மையுடன் இருக்கும் பாம்பு வகையாகும்.
- ✓ அதன் உடல் சிவப்பு, ஆரஞ்சு நிறத்திலும் பற்கள் முட்டையை எளிதாக உடைப்பதற்காக நேபாளி குக்ரியை போன்று இருப்பதனால் இந்த பெயர் பெற்றது.

- ✓ இந்த அரிய வகை பாம்பானது நேபால் மற்றும் கெர்ரீ பகுதியில் உள்ள காடுகளிலும் தெற்கு நேபால் மற்றும் வட இந்தியாவில் தாழ்ந்த பகுதிகளிலும் காண முடியும்.

**10) எந்த மாநில அரசாங்கம் சமீபத்தில் திருநங்கைகள் நல வாழ்வு வாரியத்தை அமைத்தது?**

**A]** குஜராத்

**B]** ஜார்க்கண்ட்

**C]** ராஜஸ்தான்

**D]** இமாச்சலப் பிரதேசம்

- ✓ திருநங்கைகளுக்கான சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக குஜராத் மாநில அரசாங்கம் திருநங்கைகள் நல வாழ்வு வாரியத்தை அமைத்தது. இது மாநில அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். இதன் மூலம் திருநங்கைகளுக்கான புதிய திட்டங்கள் அமல்படுத்தப்படும். இந்த நல வாரியம் திருநங்கைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டதாகும்.
- ✓ இந்த வாரியத்திற்கு மாநில சமூக நீதி மற்றும் மேம்படுத்துதல் அமைச்சர் தலைவராக நியமிக்கப்படுவார்.
- ✓ இதைத்தவிர **2** ஆண் திருநங்கைகள், **2** பெண் திருநங்கைகள், இரண்டு தன்னார்வலர்கள், பொதுமக்களில் இருவர், மற்ற உறுப்பினர்கள் அரசு அதிகாரிகளையும் உள்ளடக்கி **16** உறுப்பினர்களைக் கொண்டது இந்த வாரியம் ஆகும்.
- ✓ **2014**ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி திருநங்கைகளை மூன்றாம் பாலினத்தவராக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கான தனி வாரியத்தை அனைத்து மாநில அரசாங்கமும் நிறுவ வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.
- ✓ மேலும் இந்த தீர்ப்பில் மூன்றாம் பாலினத்தவரை (ஓபிசி) இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்க்குமாறும் அறிவுறுத்தியது.
- ✓ இதன் மூலம் அவர்களால் எளிதாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உள்ள இட ஒதுக்கீட்டை பெற இயலும்.